தொண்டமானாறு தனு வெளியீட்டகம்
THONDAMANARU THANU PUBLICATIONS

முதலாம் தவணைப் பரீட்சை - 2024

தரம் 7	புவியியல்	இரண்டு மணித்தியாலங்கள்

பகுதி I

❖ பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1. உயிரினங்கள் வாழ்வதற்கான சாதகமான சூழலைக் கொண்டுள்ள ஒரேயொரு கோளாக அமைவது.
(1) புதன் (2) செவ்வாய் (3) வியாழன் (4) புவி

2. புவியானது சூரியனைச் சுற்றி வலம் வர எடுக்கும் காலம்
(1) ஒரு நாள் (2) ஒரு மாதம் (3) ஒரு வருடம் (4) ஒரு வாரம்

3. 0^0 கொண்ட அகலக்கோடு எவ்வாறு அழைக்கப்படும்?
(1) மகரக்கோடு (2) மத்திய கோடு (3) ஆட்டிக்வட்டம் (4) கடகக்கோடு

4. 0^0 நெடுங்கோடு ஊடறுத்துச் செல்லும் நகரம் அமைந்துள்ள நாடு
(1) பிரித்தானியா (2) இந்தியா (3) தென்னாபிரிக்கா (4) சீனா

5. மாதிரிப் பூகோளத்தில் உள்ள சர்வதேச திகதிக்கோடு தொடர்பான சரியான கூற்றாக அமைவது
(1) 0^0 நெடுங்கோடாகும்
(2) 90^0 வட அகலக்கோடாகும்
(3) 180^0 நெடுங்கோடாகும்
(4) 23.5^0 தென் அகலக்கோடாகும்

6. புவி மேற்பரப்பில் மூடியுள்ள நீரின் சதவீத அளவு
(1) 29% (2) 1% (3) 100% (4) 71%

7. தரப்பட்டுள்ள விடைகளில் பரப்பளவில் பெரியதும், பரப்பளவில் சிறியதுமான கண்டங்களைக் கொண்ட விடை
(1) ஆசியா, அவுஸ்திரேலியா
(2) ஆபிரிக்கா, ஐரோப்பா
(3) ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா
(4) ஆசியா, ஐரோப்பா

8. தீவு என்பதற்கான பொருத்தமான விளக்கமாக அமைவது
(1) நிலத்தினால் சூழப்பட்ட சிறிய நிலப்பகுதி ஆகும்
(2) நீரினால் சூழப்பட்ட சிறிய நிலப்பகுதி ஆகும்
(3) சமுத்திரங்களிடையே காணப்படும் சிறிய நீர்ப்பகுதி
(4) நிலமும் நீரும் சம அளவில் சேர்ந்த பகுதி

9. வட, தென் அமெரிக்கக் கண்டங்களிற்கு இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள முக்கிய தீவுகளில் ஒன்று
(1) இலங்கை (2) சிசிலி (3) கியூபா (4) மாலைதீவு

zoom Online வகுப்புக்கள்

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை



" தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் "

PRIMARY

- தமிழ்
- கணிதம்
- சுற்றாடல்
- நுண்ணறிவு
- பேச்சு சிங்களம்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

76667-4945

10. 20 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட சமுத்திரம்
(1) பசுபிக் சமுத்திரம் (2) ஆட்டிக் சமுத்திரம்
(3) இந்து சமுத்திரம் (4) அந்தாட்டிக் சமுத்திரம்

11. மடகஸ்கார் தீவு தொடர்பான பொருத்தமான கூற்று
(1) இந்து சமுத்திரப் பகுதியில் உள்ள மிகப்பெரிய தீவு
(2) ஆபிரிக்கக் கண்டத்தின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ளது
(3) ஆசியாக் கண்டத்திலுள்ள மிகச்சிறிய தீவு
(4) இந்தியாவிற்கு அருகே அமைந்துள்ளது

12. புவியில் கற்பனையாக வரையப்பட்டுள்ள நெட்டாங்குகளின் எண்ணிக்கை
(1) 181 ஆகும் (2) 360 ஆகும் (3) 180 ஆகும் (4) 90 ஆகும்

13. பின்வருவனவற்றில் இலங்கை தொடர்பான தவறான கூற்று
(1) ஒரு தீவாக உள்ளது (2) ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ளது.
(3) இந்து சமுத்திரப் பகுதியில் அமைந்துள்ளது (4) இந்தியாவிற்கு வடக்கே அமைந்துள்ளது

14. நியூசிலாந்து என்ற நாடு அமைந்துள்ள கண்டம்
(1) ஆபிரிக்காக் கண்டம் (2) அந்தாட்டிக்காக் கண்டம்
(3) அவுஸ்திரேலியாக் கண்டம் (4) ஐரோப்பாக் கண்டம்

15. இலங்கையின் அகலம் எத்தனை கிலோமீற்றர் ஆகும்?
(1) 430 km (2) 224 km (3) 65610 km (4) 65525 km

16. எமது நாட்டின் நீளத்தினை எல்லைப்படுத்தும் இரு முனைகள்
(1) கொழும்பு, பருத்தித்துறை (2) கொழும்பு, சங்கமன்கந்தமுனை
(3) பருத்தித்துறை, தெய்வேந்திரமுனை (4) தெய்வேந்திரமுனை, சங்கமன்கந்தமுனை

17. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரினை
(1) மகான் நீரினை (2) மொசாம்பிக் நீரினை (3) மலாக்கா நீரிணை (4) பாக்கு நீரிணை

18. பின்வருவனவற்றில் இந்து சமுத்திரப் பகுதியில் அமையப் பெறும் தீவு அல்லாதது
(1) பிலிப்பைன்ஸ் தீவுகள் (2) அந்தமான் தீவுகள்
(3) நிக்கோபார் தீவுகள் (4) இலட்சத்தீவுகள்

19. சர்வதேசக் கடல் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட வருடமாக அமைவது
(1) 2004 இல் (2) 2024 இல் (3) 1984 இல் (4) 1994 இல்

20. Equator என்ற கலைச்சொல்லின் தமிழ் அர்த்தம்
(1) மத்தியகோடு (2) புவிச்சுழற்சி (3) விண்வெளி (4) கோள்

(20×2 = 40 புள்ளிகள்)

www.ikeduLK

பகுதி II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**


1. அ) தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப் படத்தில் குறித்துக்காட்டுக.
[கொழும்பு, மன்னார், பருத்தித்துறை, திருகோணமலை]

ஆ) கொடுக்கப்பட்டுள்ள விடயங்களை உலகப்படத்தில் குறித்துக்காட்டுக.
[பாக்கு நீரிணை, மாலைதீவுகள், அவுஸ்திரேலியா, இந்து சமுத்திரம்]

இ) பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடை தருக.
(1) புவியில் கற்பனையாக உள்ள அகலக்கோடுகள் எத்தனை?
(2) பூமி எத்தனை கண்டங்களைக் கொண்டு அமைந்துள்ளது?
(3) கிறீன்விச் என்ற நெடுங்கோடு எத்தனை பாகை கொண்டது?
(4) இலக்கைக்கு மேற்கே சமீபமாக அமைந்துள்ள கண்டம் எது?

(4+4+4 = 12 புள்ளிகள்)

2. அ) புவியின் நிறம், புவியின் மத்தியகோட்டு விட்டம் என்பவற்றைக் கூறுக.
ஆ) புவிச்சுழற்சி, புவிச்சுற்றுகை என்பன தொடர்பாக சுருக்கமாக விளக்குக.
இ) தரப்பட்டுள்ள மாதிரிப் பூகோளத்தில் A, B, C, D, E, F என்ற எழுத்துக்களால் சுட்டப்பட்டுள்ள அகல, நெடுங்கோடுகளின் பெயர்கை எழுதுக.



(2+4+6 = 12 புள்ளிகள்)

3. அ) கண்டங்கள் என்றால் என்ன?
ஆ) ஆசியா, ஆபிரிக்காக் கண்டங்களுக்குரிய நாடுகள் தலா இரண்டினைக் குறிப்பிடுக.
இ) பின்வருவன பற்றி சுருக்கமாக குறிப்பிடுக.
A- அகலக்கோடுகள்
B- நெடுங்கோடுகள்
C- கடல்கள்


(2+4+6 = 12 புள்ளிகள்)


4. அ) சமுத்திரங்கள் என்றால் என்ன?
ஆ) இந்து சமுத்திரம் தவிர்ந்த ஏனைய சமுத்திரங்கள் நான்கையும் குறிப்பிடுக.
இ) உலகில் பரந்து காணப்படும் கடல்கள் ஆறினைப் பெயரிடுக.

(2+4+6 = 12 புள்ளிகள்)

5. அ) இலங்கையின் நீளம், மொத்த நிலப்பரப்பு என்பவற்றைக் குறிப்பிடுக.
ஆ) தனி அமைவிடம், சார்பு அமைவிடம் என்பவற்றை சுருக்கமாகக் குறிப்பிடுக.
இ) A- இலங்கையின் தரைத்தோற்ற வலயங்கள் மூன்றும் எவை?
B- எமது நாட்டிற்கு மழைவீழ்ச்சி கிடைக்கின்ற முக்கிய மூன்று முறைகளும் எவை?

(2+4+3+3 = 12 புள்ளிகள்)





www.ikeduk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu